# செயலாற்றுகையும் பொறுப்புக்கூறலும் பற்றிய அறிக்கை 2016

## விலை மதிப்புத் திணைக்களம்

நிதி, திட்டமிடல் அமைச்சு

TOWARDS PROFESSIONAL EXCELLANCE TOWARDS PROFESSIONAL EXCELLANCE TOWARDS PROFESSIONAL EXCELLANCE TOWARDS PROFESSIONAL EXCELLANCE TOWARDS PROFESSIONAL EXCELLANCE

**உள்ளடக்கம்**

| | |
|---|---|
| **பகுதி I – முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்** | 3 |
| முகவுரை | 3 |
| அறிமுகம் | 4 |
| இந்த அறிக்கையை பயன்படுத்துவது எவ்வாறு | 4 |
| எம்மைப் பற்றி | 5 |
| எமது நோக்கு | 5 |
| எமது செயற்பணி | 5 |
| எமது முக்கிய பொறுப்புகள் | 5 |
| பிரதான செயற்பாடுகள் | 6 |
| சவால்களும் முகாமைத்துவ உபாயங்களும் | 7 |
| **பகுதி II - செயலாற்றுகையும் பகுப்பாய்வும்** | 8 |
| கல்விசார் முன்னேற்றம் | 8 |
| தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றம் | 11 |
| செயலாற்றுகை பற்றிய அளவிடலும் அறிக்கையிடலும் | 12 |
| **பகுதி III – நிதிசார் செயலாற்றுகையும் பகுப்பாய்வும்** | 24 |
| நிதிசார் செயலாற்றுகையை அளவிடலும் அறிக்கையிடலும் | 24 |
| **பகுதி IV - பதவியணியும் உழைப்பு வளமும்** | 25 |
| **பகுதி V ஆதனச் சந்தை பற்றிய மீளாய்வு** | 25 |

## பகுதி 1 - முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

### முகவுரை

அரசாங்க விலை மதிப்புத் திணைக்களமானது, எமது நாட்டின் தேச மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய பங்காற்றுகின்றது என்பதை பொதுமக்கள் நன்கறிவர். உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைக்குட்பட்ட சொத்துக்களுக்கு வரிப்பண இலக்கங்களை ஒழுங்கு முறையாக வழங்குவதும் அரசாங்க பொருளாதார முயற்சிகளை மீள வடிவமைப்பதற்காக ஒவ்வொரு காலாண்டுக்கொரு முறை விதிக்கப்படுகின்ற பொருளாதார வரிகளை மதிப்பீடு செய்வதோடு அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட செயற்திட்டங்களுக்காக கட்டாயக் கொள்வனவு அதிகாரத்தின் கீழ் எடுக்கப்படும் நிலங்களுக்கான நட்ட ஈடுகளை மதிப்பீடு செய்வது வரை எமது திணைக்களத்தின் சேவைகள் விரிவாக்கம் அடைந்துள்ளன.

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையானது குறித்த காலப்பகுதியில் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த அதேவேளை எமது நோக்கு, செயற்பணி, மற்றும் குறுங்கால, நீண்டகால குறிக்கோல்கள் என்பவை அடையப்பெற்றதை பிரதிபலிக்கின்றது. இதற்குச் சான்றாக எமது மனித பௌதீக வளங்களின் பலம் மற்றும் குழுச் செயற்பாட்டுத் தந்திரோபாயமும் இணைந்து 2015 ஆண்டினை விட மிகப் பெரிய முன்னேற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனக்கு நல்கிய ஒத்துழைப்புக்காக இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும், நிதி அமைச்சருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ பிரதி நிதி அமைச்சர் அவர்களுக்கும், திறைசேரியின் செயலாளர் அவர்களுக்கும், நிதி திட்டமிடல் அமைச்சின் அனைத்து ஊழியர்களுக்கும் இத்திணைக்களத்தின் விரிவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்ததற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது சேவைகளை வேண்டி நின்ற அரச நிறுவனங்கள். மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் வங்கிகளுக்கும், குறித்த காலப்பகுதியில் எமது திணைக்களத்தின் சேவைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு மிகவும் கரிசனையுடன் அர்ப்பணிப்போடு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து ஊழியர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி உரித்தாகட்டும். எதிர் காலத்திலும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் விலை மதிப்புத் திணைக்களத்தின் வெற்றிக்காக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பி.டி.டி.எஸ். முதுகுமாரண**
**அரசாங்க பிரதான விலை மதிப்பாளர்**
**விலை மதிப்புத் திணைக்களம்**

**அறிமுகம்**

செயலாற்றுகை மற்றும் கணக்கீடு பற்றிய இந்த அறிக்கையானது அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தினது நிதிசார் முகாமைத்துவ நடவடிக்கைகளின் ஒட்டு மொத்தமான பெறுபேறுகளைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. இது திட்டமிடல் நுட்ப முறைகள் தொடக்கம் இலங்கை அரசாங்கத்திற்கும் நிதி திட்டமிடல் அமைச்சுக்குமான திணைக்கள வரவு செலவுத் திட்டத்தினை தயார் செய்தல், அமுல்படுத்தல் மற்றும் நியாயப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளினூடாக எமக்கு ஒதுக்கப்பட்ட வளங்களின் பயன்பாடு மற்றும் எமது பணி தொடர்பான செயலாற்றுகையை வெளிப்படுத்தும் அறிக்கையாக விளங்குகின்றது. இவ்வறிக்கை இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணக் குறிப்புகளின் தேவைப்பாடுகளுக்கு இசைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இது 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களம் மேற்கொண்ட செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

**இவ்வறிக்கையைப் பயன்படுத்துவது எவ்வாறு**

இவ்வறிக்கை 2016 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் செயலாற்றுகை மதிப்பீடுகள், பெறுபேறுகள் மற்றும் கணக்கீட்டுத்தன்மை நடவடிக்கை, மற்றும் எமது நுட்பமுறைகளை அமுல்படுத்தும் போது அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள எமது வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களின் உண்மையான பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட எமது ஒப்பீட்டு ரீதியான முன்னேற்றம் போன்ற விடயங்கள் பற்றி விபரிக்கின்றது. இவை எமது தந்திரோபாயத் திட்டமிடல் மூலம் விருத்தி செய்யப்பட்டதாகும். இவ்வறிக்கை 06 பிரதான கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

- **முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு**
  2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட எமது வளங்களின் பயன்பாடு மற்றும் எமது பரந்த செயலாற்றுகை ஆகிய விடயங்களை இப்பிரிவு உள்ளடக்குகின்றது. மேலும், இது எமது குறிக்கோள்களை அடைய நாம் உபயோகித்த நுட்பமுறைகள், முகாமைத்துவம் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் எமது செயலாற்றுகையில் தாக்கத்தை ஏற்படுத்திய வெளிக் காரணிகள் என்பவற்றினையும் உள்ளடக்குகின்றது.

- **செயலாற்றுகைப் பிரிவு**
  2016 ஆம் ஆண்டிற்கான எமது செயலாற்றுகை பற்றிய விபரங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகைக் குறிக்கோள்களும் இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எமது செயலாற்றுகையினை நாம் மதிப்பிடும் முறைகளும் நாம் அடைந்துள்ள இலக்குகள் மற்றும் அடையாத இலக்குகளுக்கான காரணிகளும் இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

- **நிதிப் பிரிவு**
  2016 ஆம் ஆண்டிற்கான நிதி விடயங்கள், எமது திரண்ட நிதிக் கூற்றுக்கள், குறிப்புகள் மற்றும் இன்னும் தேவையான மேலதிகத் தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **பதவியணியும் ஊழியர் வளமும்**
  திணைக்களத்தின் மனிதவள ஆற்றல் பற்றிய விரிவான விபரங்கள் இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **ஆதனச் சந்தை மீளாய்வு**
  இலங்கையின் ஆதனச் சந்தை பற்றிய பிரதான விலைமதிப்பாளரின் கண்ணோட்டம் இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**எம்மைப் பற்றி.............**

### எமது நோக்கு

"சமூகப் பொருளாதர அபிவிருத்தியினை மேம்படுத்தும் பொருட்டு ஆதன விலை மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்தின் சர்வதேச உயர்தர நியமங்களினூடாக தொழில்சார் நிபுணத்துவத்தைப் பேணுதல்"

### எமது செயற்பணி

"இலங்கை அரசாங்கத்திற்குப் பரந்த தொழில் தேர்ச்சி மிக்க விலை மதிப்பீடு மற்றும் ஆதன முகாமைத்துவ சேவையை வழங்குவதும் வினைத்திறனும் உற்பத்தித் திறனும் மிக்க முகாமைத்துவக் கட்டமைப்பின் மூலம் போட்டித் தன்மையுடன் கூடிய செலவுசார் உணர்வுமிக்க திணைக்களமாக செயற்படுதல்"

### எமது முக்கிய பொறுப்புக்கள்

"சட்ட ரீதியான பொறுப்புக்களுக்கு மேலதிகமாக விலை மதிப்புத் திணைக்களம், அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்குப் பரந்தளவிலான விலை மதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவ சேவைகளை வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது"

### எமது குறிக்கோள்கள்

"பயன் அடிப்படையிலான செயலாற்றுகை இலக்குகளினை நோக்கிச் சிறந்த செயன்முறை நியமங்களைப் பின்பற்றி சேவை பெறுனருக்கு உயர் தொழில் சார் சேவைகளை வழங்குவது இத்திணைக்களத்தின் குறிக்கோளாகும்"

**பிரதான செயற்பாடுகள்**

இத்திணைக்களம் பின்வரும் பிரதான செயற்பாடுகளின் கீழ் வகைப்படுத்தக் கூடிய திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளான விலைமதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவம் ஆகிய விடயங்களில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் பிரதான பணிகள் கீழ்வரும் பிரதான பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன.

(அ) காணி சுவீகரித்தல் சட்டத்தின் 38 (அ) பிரிவின் கீழ் பொது நோக்கங்கள் தொடர்பில் கட்டாயமாக சுவீகரிக்கப்படுகின்ற தனியார் காணிகள் பற்றிய நிலைமை அறிக்கைகளைத் தயாரித்து, அதனைத் தொடர்ந்து குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய காணிகள் தொடர்பில் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளுக்கான விலை மதிப்புகளைத் தயாரித்தல்.

(ஆ) காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில், நிதியை ஒதுக்கீடு செய்வதற்காக நஷ்டஈட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

(இ) தனியார் ஒப்பந்தத்தின் கீழான கொள்வனவு, கணக்கீடு மற்றும் குத்தகை நோக்கங்களுக்கான மதிப்பீடுகள் அடங்கலாக பல்வேறுபட்ட நோக்கங்கள் தொடர்பில் நிலையான மற்றும் நிலையற்ற ஆதனங்களை மதிப்பிடுதல். பிரதான மதிப்பாளர் தேவைப்படுத்தப்படுகின்ற போதும் சட்ட ஏற்பாடுகளான இலஞ்சம் பற்றிய சட்டம் மற்றும் காணி மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் அத்தகைய மதிப்பீடுகளை மேற்கொள்ள தத்துவமளிக்கப்படுகின்ற போதும் விலை மதிப்புகள் மேற்கொள்ளப்படும்.

(ஈ) அரச மற்றும் பிற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக இனங்காணப்பட்ட அவற்றின் ஆதன உடமைகள் தொடர்பில் அல்லது அவற்றின் பாவனை மற்றும் அமைவிட நோக்கத்ததிற்காக அத்தகைய நிறுவனங்களுக்கு தனியார் ஆதனங்களைத் தேவைப்படுத்துகின்ற போது வாடகை பற்றிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

(உ) வரிகளை விதிப்பதற்காக உள்நாட்டு வரிவிதிப்பு தொடர்பில் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் உள்ளடங்கியுள்ள சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து உள்ளூர் அதிகார சபைகளினது அதிகாரத்தினுள் வருகின்ற ஆதனங்களின் மதிப்பீடுகளையும் மீள்மதிப்பீடுகளையும் இத்திணைக்களம் நிறைவேற்றி வருவதுடன், பாதிக்கப்பட்டவரின் செலுத்தநர்கள் மூலம் அத்தகைய மதிப்பீடுகள் தொடர்பில் செய்யப்படும் ஆட்சேபனைகளை நிர்ணயிப்பதிலும் உதவுகின்றது.

(ஊ) விசேடமாக இலங்கை செலாவணி பாதுகாப்பு ஆணைக்குழு மற்றும் இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு தர மதிப்பீட்டுச் சபை போன்ற நிறுவனங்களுக்கு சொத்து மதிப்பீடு மற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகிய விடயங்களில் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

(எ) நிபுணத்துவம் வாய்ந்த சான்றுகளை வழங்குவதன் ஊடாக சொத்து நஷ்ட ஈடுகளைத் தீர்மானிக்கின்ற மற்றும் மதிப்பீட்டுப் பிணக்குகளை விசாரணை செய்கின்ற சட்ட நீதிமன்றங்களுக்கும் பல்வேறுபட்ட பிற நியாய சபைகளுக்கும் இத்திணைக்களம் உதவி வருகின்றது. கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள சொத்துக்கள் தொடர்பான விடயங்கள் தவிர மேலும் வாடகை சபை பற்றிய கூட்டங்களில் பிரதான மதிப்பீட்டாளருக்கும் இத்திணைக்களத்தின் ஊழியர்கள் உதவி வருகின்றனர்.

(ஏ) திறைசேரியினால் கோரும் பட்சத்தில் பொது முயற்சிகளினது வியாபார நிலை மதிப்பு நடவடிக்கைகளையும் இத்திணைக்களம் மேற்கொள்கின்றது.

(ஐ) பிரதான மதிப்பீட்டாளரின் அங்கீகாரத்துடன். கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள அரச உடமை ஆதனங்களின் வருடாந்த பெறுமானத்தினை மதிப்பிடுகின்றது.

(ஒ) கணக்கீட்டு நோக்கத்திற்காக அரச மற்றும் பகுதியளவில் அரச உடமை உடைய நிறுவனங்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்தல்.

**சவால்களும் முகாமைத்துவ உபாயங்களும்**

சவால்களும் நுட்ப முறைகளும் பகுதியானது உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான மதிப்பீடு, செயற்றிறன் மதிப்பீடு, நிதி அறிக்கையிடல் என்பவற்றின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் என்பவற்றுடன் தொடர்பு படுகின்றது. மேலும் சரியானதும் வினைத்திறன் மிக்கதுமான திட்டத்தை விருத்தி செய்து அதனை அமுல்படுத்தி கண்காணிப்பதனூடாக அதனுடைய பலவீனங்கள், சரியான கணக்கீட்டுத் தன்மையை உறுதி செய்வதோடு அதன் விளைவுகளை அறிக்கையாக வெளிப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தரவுகளின் படி திணைக்களத்தின் செயற்றிறனை ஆய்வு செய்வதன் மூலமும் அத்தரவுகளை வெளிப்படுத்துவதன் மூலமும் மதிப்பீட்டு நடவடிக்கையின் பற்றாக்குறையான தன்மையை அடையாளம் கண்டு கொள்ளவும் அப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தேவையையும் அடையாளம் கண்டு கொள்ளவும் முடிகின்றது. இதனூடாக உயர் முகாமைத்துவத்தினால் ஆண்டின் வினைத்திறனையும் விளைதிறனையும் மதிப்பிட முடிகின்றது.

நாங்கள் வழங்கும் சேவையானது முகாமைத்துவத்தினுடைய வினைத்திறன் மற்றும் விளைதிறனில் பெருமளவு தங்கியுள்ளது. இது எம்முடைய அடிப்படைக் கருத்துக்கள் மீது மறுகவனம் செலுத்தி எம்மை வழி நடத்துவதனூடாக மிகச் சிறந்த மதிப்பீட்டுத் தந்திரோபாயத்தை விருத்தி செய்து எமது நிறுவனத்தின் இயலுமையை அடையக் கூடியதாக உள்ளது. மேலும் எமது பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தலை அளவிடுவதற்கு சிறந்த செயற்றிறன் மதிப்பீட்டு முறை இல்லாத சந்தர்ப்பமானது மிக முக்கியமான சவாலாக அமைந்தும் விடுகின்றது.

நிறுவன முகாமை என்ற புதிய கருத்தின் மூலம் எமது செயற்றிறனை விருத்தி செய்து அதனூடாக எமது உள்வாரியான மற்றும் வெளிவாரியான ஆற்றல்கள், சவால்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவற்றை மதிப்பிட முடிகின்றது. எமது நடவடிக்கையின் பிரதானமான கவனமானது அவர்களின் பலம் எங்கே உள்ளது என்பதிலும் மிகப்பெரிய வாய்ப்புக்கள் எங்கே இல்லாமல் போகின்றது என்பதிலும் காணப்படுகின்றது. ஓர் திறன்பட்ட அரச நிறுவனமாக சொத்து முகாமைததுவம் மற்றும் மதிப்பீடு ஆகிய துறைகளில் ஓர் பரந்த சந்தையைப் பெற்று அரசாங்கம் மற்றும் பகுதியளவில் அரச சார்புடைய நிறுவனங்களுக்கு எமது சேவையை வழங்குகின்றோம்.

எமது திணைக்களத்திற்குப் பொருத்தமான பிரதான அதிகாரிகள் கிடைக்கக் கூடியதாக உள்ளமை எமது பெரும் வளமாக காணப்படுகின்றது. எமது திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் எனும் விசேட பட்டப்படிப்பை பெற்றவர்களாக உள்ளனர். அத்தோடு அனைவரும் தேவையான அறிவு ஆற்றலோடு புதிய திறன்களையும் கொண்டவர்களாக உள்ளனர். அத்தோடு உயர் தரத்திலான தொழில் திறனைப் பேணிக்கொள்ளும் பொருட்டு அரச பட்டய நிலஅளவை நிறுவனத்தில் தொடர்ச்சியான தொழில் விருத்தி கட்டளைகளுக்கு அமைய செயற்பட்டு தனது சேவைக் காலத்தினுள் தேவையான அறிவு மற்றும் திறன்களை நாளதுவரைப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அரச நிலஅளவை நிறுவனத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விலை மதிப்புத் திணைக்களத்தினால் துரித வழிமுறைகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. மேலும் எமது திணைக்களமானது மாவட்ட விலை மதிப்பீட்டாளர் மற்றும் உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் ஆகியோருக்கு அதே பல்கலைக்கழகத்தில் முதுமாணி சொத்து முகாமைததுவமும் மதிப்பீடும் பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக நிதியுதவி வழங்குகின்றது. மேலும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் திணைக்கள ஊழியர்களின் விலை மதிப்பீடு தொடர்பான அறிவை மேம்படுத்தும் முகமாக சாத்தியமான விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

## பகுதி II எமது பணிகள் பற்றிய செயலாற்றுகையும் பகுப்பாய்வும்

### கல்விசார் முன்னேற்றம்

### திறன் அபிவிருத்தி நிலையம்

திறன் அபிவிருத்தி நிலையம், (SDC), 2006 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு ***"அறிவு, மனப்பாங்கு மற்றும் வினைத்திறன்"*** எனும் கருப்பொருளினை அடிப்படையாகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் கல்வி மேம்பாடு (Life Long Lerning) எனும் நிறுவனத்தின் ஊடாக ஊழியரின் பிரதான அடிப்படைகள், கௌரவம் மற்றும் அர்ப்பணிப்பு அத்துடன் ஊக்கம் என்பவற்றினூடாக திறன் அபிவிருத்தியுடன் இணைந்து செயலாற்றுகை மதிப்பீட்டை மேம்படுத்தி வருகின்றது. விலைமதிப்புத் திணைக்களத்தினுள் திறன் அபிவிருத்தி நிலையம் அமைக்கப்பட்டதன் நோக்கம் சகல ஆளணியினரதும் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தும் பரந்த நோக்கிலாகும். இந்த திறன் அபிவிருத்தி நிலையமானது,(SDC) விலைமதிப்புத் திணைக்களத்துடன் சேர்ந்து பயிற்சி பாடசாலையொன்றாக ஆரம்பத்தில் நிறுவப்பட்டது. பயிற்சி சார்ந்த துறைகளில் அதிக கிராக்கி நிலவியதன் காரணமாக அதன் செயற்பாடுகள் விரிவாக்கம் பெற்று இந்த பயிற்சிப் பாடசாலை புத்தாக்க நிறுவனமாக மாற்றம் பெற்றது. கடந்த வருடங்களில் இந்த பயிற்சி நிறுவனத்தினால் இலாபகரமான மற்றும் இலாப நோக்கம் அற்ற பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திணைக்கள மட்டத்திலும் வெளி நிறுவனங்களுக்கும் நடாத்தப்பட்டன.

திணைக்களத்தின் உயர் முகாமைத்துவ மட்டம் தொடக்கம் உதவிப்பதவியினர் மட்டம் வரையான திணைக்கள ஊழியர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதன் ஊடாக உன்னத தன்மையினை அடைவதை நோக்காக கொண்டு செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவை ஒழுங்கமைத்து நடாத்தப்பட்டன.

திறன் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு பிரதான பகுதிகளுக்குள் அடங்குகின்றன.

- உள்வாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
- வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

தொடர்புபடுகின்ற துறைகளுக்கமைவாக அவை மேலும் உப பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. திறன் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இலகு குறிப்பாக்கலுக்காக பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அ. உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (உள்ளக தொழில்சார் மற்றும் முகாமைத்துவ பதவியணிக்கான)**

(அ) பதவி தொடர்பான பயிற்சி நிகழ்சித் திட்டங்கள்
(ஆ) குறித்த விடயம் தொடர்பான நோக்காகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்
(இ) பரீட்சையினை நோக்காகக் கொண்ட பயிற்சி வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள்
(ஈ) அறிவைப் பகிர்ந்து கொள்ளும் வகுப்புகள்

**ஆ. வெளிவாரி நிகழ்ச்சித் திட்டங்கள்**

(அ) உள்ளூராட்டசி மன்ற ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்
(ஆ) மாகாண வருமான உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் மற்றும் செயலமர்வுகள்
(இ) விஞ்ஞானமானி சொத்து முகாமைத்துவ மதிப்பீட்டு பட்டதாரிகளுக்கான நிகழ்ச்சித்திட்டம்
(ஈ) சுவீகரித்தல் அலுவர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் பயிற்சி வகுப்புகள்
(உ) தேவைக்கேற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்

திட்டங்கள்

## பயிற்சி வசதிகளும் அனுசரணையளிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் 2016

## 1. ஏனைய நிறுவனங்களுக்கான குறித்த நோக்கத்திற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

**விஞ்ஞானமானி சொத்து முகாமைத்துவ மதிப்பீட்டு பட்டப் படிப்பு மூன்றாம் வருட மாணவர்களுக்கான செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.**

இது 10 நாட்கள் கொண்ட விளக்க வகுப்புகளுடன் செயன்முறை பயிற்சி வகுப்புக்களையும் உள்ளடக்கியதாகும். இது கள ஆய்வில் ஆரம்பித்து அதனை அறிக்கையாக சமர்ப்பித்தல் வரை உள்ளடக்கியதாகும். 2016 ஆம் ஆண்டில் 160 பட்டதாரி மாணவர்களுக்காக இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## II. உள்ளக அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

### மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

திணைக்களத்தின் 65 மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்காக ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

### திணைக்களத்தின் சகல விலை மதிப்பீட்டாளர்களுக்கான செயலமர்வு

திணைக்களத்தின் சகல மதிப்பீட்டாளர்களுக்காகவும் ஒரு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது.

### மாவட்ட மற்றும் பிராந்திய விலை மதிப்பீட்டாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

மாவட்ட மற்றும் பிராந்திய விலை மதிப்பீட்டாளர்களுக்கு அரசாங்க பெறுகை நடைமுறைப் பற்றிய அறிவை வழங்கும் பொருட்டு ஒரு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது.

## III. பரீட்சையினை நோக்காகக் கொண்ட பயிற்சிகள்

**உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கான பயிற்சி**

உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களை இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவை வகுப்பு II தரம் II க்கு தயார்ப்படுத்துவதை நோக்காகக் கொண்டு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை I, II ற்கு தோற்றுவதற்கு தகைமையுடைய உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கு நிலைமை அறிக்கைகள், வரி மதிப்பீடு, நிர்வாகம், நிதி, மூலதன விலை மதிப்பீடு திணைக்கள ஒழுங்கமைப்பு மற்றும் குறித்த நோக்கத்திற்கான குறித்த சொத்திற்கு மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் போன்ற முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

**மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கான பயிற்சி**

மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களை இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவை வகுப்பு I தரம் II க்கு தயார்ப்படுத்துவதை நோக்காகக் கொண்டு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை I, II இற்கு தோற்றுவதற்கு தகைமையுடையவர்களுக்கு காணி சுவீகரிப்புகளுடனான உயர் விலை மதிப்பீடு போன்ற முக்கிய விடயங்களை உள்ளடக்கிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

## VI. உள்ளக அலுவலர்களுக்கான வெளிவாரி பயிற்சி

**சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் முதுமானி பட்டப் படிப்பிற்கான நிகழ்ச்சித்திட்டம்**

பிரித்தானிய ரெடின் பல்கலைக்கழகத்தில் ஒரு மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட முதுமானி பட்டப்படிப்பினைத் தொடர்வதற்கான நிதி வசதியளிக்கப்பட்டுள்ளது.

**அரசாங்க பெறுகை நடவடிக்கை மற்றும் ஒப்பந்த நிர்வாகம் பற்றிய டிப்ளோமா பாடநெறி**

ஒரு பிரதி பிரதான விலை மதிப்பீட்டாளர் மற்றும் ஒரு மாவட்ட விலை மதிப்பீட்டாளர் மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினர்.

**தகவல் தொழில்நுட்ப நிறைவேற்றுநர் அல்லாதவர்களுக்கான அடிப்படை தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம்**

பிரதம விலைமதிப்பீட்டாளர் மற்றும் மேலதிக பிரதம விலை மதிப்பீட்டாளர் மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினர்.

**அரச பெறுகை நடைமுறை மற்றும் கொள்கை வழிகாட்டல் பயிற்சி நெறி**

திணைக்களத்தைச் சேர்ந்த 03 உத்தியோகத்தர்கள் மேற்படி பயிற்சி நெறியில் பங்குபற்றினர்.

**நிதிச் சந்தைப் பற்றிய அறிமுக பயிற்சி நெறி**

நிறுவன ஒழுக்கங்கள், திணைக்கள கட்டளைகள் மற்றும் சுற்றுநிருபங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு திணைக்களத்தின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் இந்த பயிற்சி நெறியில் பங்கெடுத்தார்.

**தாபன விதிக் கோவை மற்றும் அதன் பிரயோகம் பற்றிய பயிற்சி நெறி**

திணைக்களத்தின் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஒரு நாள் செயலமர்வில் பங்கு பற்றினர்.

**உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களுக்கான செயலமர்வு**

‘ஹை பிரான்ட் டீம்’ எனும் நிறுவனத்தில் நடைப்பெற்ற திணைக்களங்களத்தின் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களுக்கான தலைமைத்துவ செயலமர்வில் உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர்கள் பங்கு பற்றினர்.

**முகாமைத்துவம் / கணக்காய்வு பற்றிய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

திணைக்களத்தின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் இந்த பயிற்சி நெறியில் பங்கெடுத்தார்.

### தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றம்

விலை மதிப்பீட்டுத் திணைக்களம் அண்மைக் காலத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் சிறந்ததொரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளதுடன், இது உலகலாவியத் தரத்திற்கேற்ப செயற்படுவதோடு ஈ - அரசாங்க கொள்கைகளின் தேவைக்கேற்ப தொழிற் தகைமையைப் பேணக் கூடிய வகையில் அதன் சேவைகளைத் தொடர்கின்றது.

**திணைக்களத்தின் இணையத்தள அபிவிருத்தி**

வினைத்திறன்மிக்க தொடர்பாடலுக்கான மேடையொன்றையும் மற்றும் பொதுத் தகவல்களுக்கான அணுகுகையினையும் உருவாக்கும் முயற்சியுடன் திணைக்களம் இணையத் தளம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. பொது மக்களுக்கு தமது தேவைகள் குறித்து இலகுவாக இடைத் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய சாத்தியத்தை வழங்குவதன் காரணமாக அது வெளிப்படைத் தன்மையையும் சனநாயகத்தையும் கொண்ட பயன்மிக்க ஒரு கருவியாக இருக்கின்றது. ஈ - அரசாங்க வசதிகளின் கீழ் பொது மக்களுக்கு வழங்கக் கூடிய மற்றுமொரு முக்கியமான ஈ - சேவைகள் ஆரம்ப மட்டத்தில் காணப்படுகின்றன.

**செயலாற்றுகையினை அளவிடுதலும் அறிக்கயைிடுதலும்**

**I. காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழான விலை மதிப்பீடுகள்**

2016 ஆம் ஆண்டின் போது திணைக்களமானது காணி சுவீகரித்தல் சட்டத்தின் பிரிவு 17(1) இன் நியதிகளுக்கமைய காணி சுவீகரித்தல் தொடர்பாக 20,045 அலகுகள் தொடர்பில் விலைமதிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38(ஆ) பிரிவின் கீழ் உடனடியாக செயற்படும் வகையில் அரசாங்கத்திற்குரித்தாக்கப்பட்ட காணிகள் தொடர்பில் 23,389 நிலைமை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**II. கட்டாயக் காணி கொள்வனவிற்கான ஏற்புடைய சொத்துக்கள் தொடர்பான மதிப்பீடுகள்**

2016 ஆம் அண்டின் போது 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் காணி பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த காணிகள் தொடர்பில் நிதி ஒதுக்கீடு செய்வதற்காக 1032 மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**III. அரசாங்க மற்றும் அரச சார்பு கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் விலை மதிப்பீடு**

2016 ஆம் ஆண்டு 41,987 சொத்துக்கள் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

**IV. இலஞ்ச சட்டத்தின் கீழான விலை மதிப்பீடு**

2016 ஆம் ஆண்டின் போது இலஞ்ச சட்டத்தின் கீழ் 09 விலை மதிப்பு அறிக்கைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டன.

**V. முத்திரைத் தீர்வைக்கான விலை மதிப்பீடு**

336 சொத்துக்கள் முத்திரை தீர்வை நோக்கங்களுக்காக விலை மதிப்பீடு செய்யப்பட்டன.

**VI. அரச சொத்துக்கள் தொடர்பில் மாதாந்த வாடகைகள் மற்றும் ஏனைய நானாவித குத்தகைகளை நிர்ணயம் செய்தல்**

தாபன விதிக்கோவையின் xix அத்தியாயத்தின் பிரிவு 5.1 மற்றும் 7.1 இன் நியதிகளுக்கமைய 4,137 சொத்துக்கள் தொடர்பில் சிக்கன வாடகைகள் மற்றும் தண்டனை வாடகைகள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டன.

**VII. வாடகை விலை மதிப்பீடுகள்**

2016 ஆம் ஆண்டின் போது, பல்வேறுபட்ட அரச நிறுவனங்களின் உபயோகத்துக்காக தேவைப்படுத்தப்பட்ட 8,912 சொத்துக்களின் வாடகை விலை மதிப்பீடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

திணைக்களத்தின் அலுவலர்கள் நாடளாவிய ரீதியில் 625 வாடகைச் சபைகளுக்காக பிரதான விலை மதிப்பீட்டாளர்களாக செயற்பட்டனர்.

**வருடா வருடம் எதிர்பார்க்கப்பட்டதும் நிறைவுசெய்யப்பட்டதுமான விலை மதிப்புகள்**

| விலை மதிப்பு வகைகள் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 எதிர்பார்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| நிலைமை அறிக்கைகள் | 6693 | 13818 | 22877 | 8092 | 23389 | 20000 |
| காணி சுவீகரித்தல்கள் | 8366 | 9320 | 16476 | 15639 | 20045 | 31500 |
| காணி மதிப்பீடுகள் | 1628 | 1423 | 1243 | 648 | 1032 | 600 |
| நானாவிதக் காணிகள் | 29820 | 58563 | 48174 | 33222 | 41987 | 30000 |
| இலஞ்ச ஆணையாளர் | 11 | 17 | 3 | 10 | 9 | |
| முத்திரைத் தீர்வை | 595 | 472 | 341 | 165 | 336 | 375 |
| தனியார்த்துறை வாடகைகள் | 5686 | 6851 | 6067 | 7619 | 8912 | 8000 |
| அரசாங்க வாடகைகள் | 5925 | 5159 | 4521 | 4094 | 4137 | 4000 |




* முத்திரைத் தீர்வை மற்றும் இலஞ்ச ஆணையாளரின் விலைமதிப்புகள் காட்டப்படவில்லை.

**பொதுவான விலைமதிப்பு –2016 இலக்கு ‹2016 அடையப்பெற்றது ›2017 எதிர்பார்ப்பு**

| | 2016 இலக்கு | 2016 அடையப்பெற்றது | 2015 எதிர்பார்ப்பு |
|---|---|---|---|
| நிலைமை அறிக்கைகள் | 25000 | 23389 | 20000 |
| காணி சுவீகரித்தல்கள் | 20000 | 20045 | 31500 |
| காணி மதிப்பீடுகள் | 500 | 1032 | 600 |
| நானாவிதக் காணிகள் | 30000 | 41987 | 30000 |
| தனியார்த்துறை வாடகைகள் | 8000 | 8912 | 8000 |
| அரசாங்க வாடகைகள் | 4000 | 4132 | 4000 |



## VIII. வரி மதிப்பீட்டின் பொழிப்பு:

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் “உள்நாட்டு வரிகளை” விதிப்பதற்காக மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் அதிகாரத்துக்கு உட்பட்ட அதிகளவான ஆதனங்களின் வரி மதிப்பீடுகளை இத்திணைக்களம் நிறைவு செய்துள்ளது. அத்துடன் இத்திணைக்களம் கீழே காட்டப்பட்டுள்ளவாறு மதிப்பீட்டிற்குப் பின்னரான பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

**வரிப்பணம் விலைமதிப்பு**

**வருடா வருடம் எதிர்பார்க்கப்பட்டதும் நிறைவுசெய்யப்பட்டதுமான மீள் மதிப்பீட்டுப் பணிகள்**

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 எதிர்பார்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| பூர்வாங்க ஆய்வு | 279,357 | 243,390 | 184,675 | 119,539 | 173,619 | 400,000 |
| இறுதிப் பரிசோதனை | 243,726 | 203,702 | 180,548 | 150,455 | 166,155 | 400,000 |



**வரிப்பணம் மீன் விலைமதிப்பு**

**மீன் மதிப்பீடுகள்- 2016 இலக்கு ‹2016 அடையப்பெற்றது › 2017 எதிர்வுகூறல்**

| | 2016 இலக்கு | 2016 அடையப்பெற்றது | 2017 எதிர்வுகூறல் |
|---|---|---|---|
| பூர்வாங்க மீன் மதிப்பீடுகள் | 300,000 | 173,619 | 400,000 |
| இறுதிப் பரிசோதனை | 300,000 | 166,155 | 400,000 |

**மீன் மதிப்பீடுகள்- 2016 இலக்கு, 2016 அடையப்பெற்றது, 2017 எதிர்வுகூறல்**



## வரிப்பணம் மதிப்பீடு சம்பந்தமான பணிகளின் கணக்கு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 எதிர்வுகூறல் |
|---|---|---|---|---|---|---|
| மீள் மதிப்பீடு | 32,596 | 31,133 | 26,290 | 25,919 | 28,769 | 28000 |
| கட்டடங்களின் மீள் மதிப்பீடுகள் | 2,152 | 1,676 | 2,227 | 1,499 | 1,680 | 2000 |
| வரிப்பண மீள் மதிப்பீடு பற்றிய எதிர்ப்பு | 9,393 | 10,665 | 8,451 | 5,149 | 2,512 | 8000 |



**வரிப்பண மீள் மதிப்பீடு**

**2016 இலக்கு ‹ 2016 அடையப்பெற்றது › 2017 எதிர்வுகூறல்**

| | 2016 இலக்கு | 2016 அடையப்பெற்றது | 2017 எதிர்வுகூறல் |
|---|---|---|---|
| காணிகளை மீள் மதிப்பீடுசெய்தல் | 25000 | 28,769 | 28,000 |
| கட்டடங்களை மீள் மதிப்பீடுசெய்தல் | 2500 | 1,680 | 2,000 |
| வரி மதிப்பீடு பற்றிய எதிர்ப்பு | 3000 | 2,512 | 8,000 |



## IX. காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையின் செயற்பாடுகள் பற்றிய சுருக்கமான விபரம்

கட்டாயக் காணி சுவீகரித்தல்களுக்காக வழங்கப்பட்ட நட்டஈடுகளில் திருப்தி அடையாத தரப்புகளினால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளை விசாரணை செய்யும் பொருட்டு அரசாங்கம் சார்பில் வழக்கு தொடுப்பதற்கு 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் சட்டத்ததின் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்ட "காணி சுவீகரித்தல் மீளாய்வு சபைக்கு" இத்திணைக்களத்தின் சட்டப் பிரிவு உதவி வருகின்றது.

### காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையின் நிருவாகச் செயற்பாடுகள்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 1161 | 2088 | 978 | 2216 | 178 |
| குறித்த வருடக் காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றவை | 325 | 245 | 429 | 558 | 215 |



## காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையினால் நடாத்தப்பட்ட மேன்முறையீடுகளின் சுருக்கம்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| விசாரணையின் பின்னர் பூர்த்திசெய்யப்பட்டவை | 297 | 279 | 256 | 282 | 214 |
| மீளப்பெறப்பட்ட மேன்முறையீடுகள் | 143 | 61 | 18 | 19 | 107 |
| தீர்க்கப்பட்ட மேன்முறையீடுகள் | 106 | 52 | 52 | 89 | 75 |
| நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகள் | 42 | 81 | 114 | 176 | |

### காணி சுவீகரித்தல் மீளாய்வு சபையின் நிருவாகச் செயற்பாடுகள்



## அரச சொத்துக்களின் மதிப்பீடு

அரச உரிமைச் சட்டத்தின் கீழ் சகல அசையாச் சொத்துக்களையும் மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக தேவையான மேலதிக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்ததன் மூலம் அரச சொத்து மதிப்பீட்டு அலகு மூலமாக கூட்டிணைக்கப்பட்டு துரித கருத்திட்டம் ஒன்றாக இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த 2012 - 2016 ஆம் அண்டு காலப் பகுதியில் 77 அமைச்சுக்களின் மொத்த சொத்து அலகுகள் 6,608 ஏற்புடைய சொத்துக்களின் விலைமதிப்புச் செய்யும் பொறுப்பு திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டளவில் அந்த சொத்துக்களின் 6279 அலகுகளின் சொத்து மதிப்பீடுகள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டு அதற்குரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 324 அலகுகளின் விலைமதிப்புக்கள் எதிர்காலத்தில் செய்வதற்கு எஞ்சியுள்ளன.

**2016 ஆம் ஆண்டு பிராந்திய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்களின் சாரம்**

கடந்த சில வருடங்களில் இலங்கையின் அரச இயந்திரத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அரசாங்க கொள்கைகள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்களுக்கு இணங்க நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த அபிவிருத்திப் பணிகளை தடையின்றி முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு தொழிற்துறை உயர் விலைமதிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவ சேவைகளை பாரிய அளவில் வழங்கும் பொருட்டு விலைமதிப்புத் திணைக்களம் தொடர்புபட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்களில் நாடு முழுவதும் பல்வேறுபட்ட துறைகளில் தோற்றம் பெற்ற வியாபார மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி பிரதேசங்கள், தேசியப் பொருளாதாரம், தேசிய போக்குவரத்து கட்டமைப்பு மற்றும் சுற்றுலா வலயங்களில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளடங்கும். விலை மதிப்புத் திணைக்களம் இந்த விசேட கருத்திட்டங்களுக்குரிய சகல காணித் துண்டுகளினதும் காணி சுவீகரிப்பு மற்றும் காணி மீளமைப்பு குழுக்களின் கூட்டங்களில் பங்கெடுத்துள்ளது. அந்த சொத்துக்களின் விலை மதிப்புக்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காணி சுவீகரிப்பு மற்றும் காணி மீளமைப்பு குழுக்களின் கூட்டங்களில் எழுந்த பிணக்குகள் தொடர்புற்ற விசேட கூட்டங்களுக்கும் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டுள்ளனர். 2016 ஆம் ஆண்டு இவ்வாறான 391 விசேட கூட்டங்களில் பங்குபற்றி ஆதன பிணக்குகளை தீர்ப்பதற்கு உதவி வழங்கியுள்ளனர்.

**2016 ஆம் ஆண்டு பிராந்திய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்களின் சாரம்**

| இல | பொறுப்பான பிராந்திய அலுவலகம் | கருத்திட்டங்கள் | அலகுகள் |
|---|---|---|---|
| 1 | மேல் மாகாண தெற்கு | ஹொரன- அங்குருவாதொட்ட- அளுத்கம | 384 |
| 2 | | பொகுன விட்ட- கோரலஇம | 250 |
| 3 | | களுவெல்ல - பெல்லபிட்டிய | 257 |
| 4 | | வாத்துவ - மொரன்துடுவ | 496 |
| 5 | | கொட்டாவ - தலகல | 193 |
| 6 | | பெல்லன - மொரகல | 657 |
| 7 | வட மத்திய | யான் ஒய | 2696 |
| 8 | | பொலனறுவை நகர அபிவிருத்தித் திட்டம் | 46 |
| 9 | மேல் மாகாண வடக்கு | மத்திய அதிவேகப் பாதை | 5277 |
| 10 | ஊவா | லுனுகம்வெஹெர பெரலியல கதிர்காமம் வீதி அபிவிருத்தித் திட்டம் | 176 |
| 11 | | பதுளை – செங்கலடி வீதி அபிவிருததித் திட்டம் | 2038 |
| 12 | | உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டம் | 566 |
| 13 | | மொணராகலை நீர் மின்வலு கருத்திட்டம் | 1184 |
| 14 | | பதுளை - ஹாலிஎல – எல்ல நீர் மின்வலு கருத்திட்டம் | 31 |
| 15 | | உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டம் | 1500 |
| 16 | | பலங்கொட – பண்டாரவல வீதி அபிவிருத்தித் திட்டம் | 30 |
| 17 | | பதுளை ஸ்பிரிங்வெலி வீதி அபிவிருத்தித் திட்டம் | 96 |
| 18 | சப்பிரகமுவ | மத்திய அதிவேகப் பாதை | 1210 |
| 19 | | மாதம்பை – ரக்வானை வீதி அபிவிருத்தித் திட்டம் | 727 |
| 20 | மேல் மாகாண மத்தி | வேரஸ்கங்க மழை நீர் சுத்திகரிப்பு கருத்திட்டம் | 1501 |
| 21 | | கிருலபன கொடகம | 400 |
| 22 | | ஒபெக் 2 கருத்திட்டம் | 3944 |
| 23 | | ஒபெக் 3 கருத்திட்டம் | 2970 |
| 24 | கிழக்கு | கின்னியா தம்பலகாமம் பாதை விஸ்தரிப்பு கருத்திட்டம் | 185 |
| 25 | | பேராதனை – செங்கலடி பாதை விஸ்தரிப்பு கருத்திட்டம் | 44 |
| 26 | | ரம்புக்கன் ஓயா நீர் மின்வலு கருத்திட்டம் | 1518 |
| 27 | மெட்ரோ | மெரைன்ரைவ் வீதி கருத்திட்டம் | 170 |
| 28 | | ஒருகொடவத்த அம்பதலே வீதி கருத்திட்டம் | 500 |
| 29 | | களணிமுல்ல – கொஸ்வத்த வீதி கருத்திட்டம் | 100 |
| 30 | | பாமன்கட – ஹொரண வீதி | 445 |
| 31 | | புனித செபஸ்டியன் கால்வாய் அபிவிருத்தித் திட்டம் | 60 |
| 32 | | சிலேவ் ஐலன்ட் மீள் அபிவிருத்தித் திட்டம் | 450 |
| 33 | | மட்டக்குளி பாலம் அபிவிருத்தித் திட்டம் | 175 |
| 34 | | புத்கமுவ வீதி கருத்திட்டம் | 200 |
| 35 | | ராஜகிரிய மேம்பாலம் | 25 |

| | | | |
|---|---|---|---|
| 36 | வடமேல் | மத்திய அதிவேகப் பாதை | 6032 |
| 37 | | தெதுருஓய நீர் மின்வலு கருத்திட்டம் | 330 |
| 38 | | பாதெனிய அனுராதபுரம் வீதி | 20 |
| 39 | வடக்கு | புலோலி – கொடிகாமம் - கச்சாய் வீதி | 213 |
| 40 | மத்திய ii | மொரகஹகந்த மற்றும் களுகங்க அபிவிருத்தித் திட்டம் | 6886 |
| 41 | | இஹல கொத்மலை நீர் மின்வலு கருத்திட்டம் | 100 |
| 42 | மத்திய i | மத்திய அதிவேகப் பாதை | 520 |
| 43 | | A9 வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் | 230 |
| 44 | | பேராதனை – கட்டுகஸ்தோட்டை வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் | 200 |
| 45 | தெற்கு | தெற்கு அதிவேப் பாதை | 6436 |
| 46 | | பொல்வத்த பாலம் | 7 |
| 47 | | பொல்அதுமோதர பாலம் | 65 |
| 48 | | கொவியாபான பாலம் | 22 |
| 49 | | திஹகொட வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் | 66 |
| 50 | | யட்டியன வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் | 100 |
| 51 | | தெனிய 1/2 பாலம் | 2 |
| 52 | | இமதுவ நகர அபிவிருத்தி | 125 |
| 53 | | மொரகொட எல | 324 |
| 54 | | காலி பத்தேகம வீதி | 1160 |
| 55 | | பத்தேகம வீதி | 647 |
| 56 | | தெத்துவ சுற்றுலா கருத்திட்டம் | 200 |
| 57 | | ஹம்பந்தோட்ட கன்னொருவ மீகஹஜந்துர வீதி | 886 |
| 58 | | மிரிஜ்ஜவில சூரியவெவ வீதி கருத்திட்டம் | 1297 |
| 59 | | வலஸ்முல்ல நகர அபிவிருத்தித் திட்டம் | 363 |
| 60 | | வீரகெட்டிய நகர அபிவிருத்தித் திட்டம் | 595 |

**2016 ஆம் ஆண்டு விலைமதிப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட துரித கருத்திட்டங்கள்**

**சாலாவ கொஸ்கம போர் தளவாடக் கிடங்கு வெடிப்பு**

| **இல** | **விபரம்** | **சொத்துக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | கட்டிட மதிப்பீடு | 2106 |
| 2 | வியாபாரப் பொருட்கள் | 59 |
| 3 | பொருட்கள் | 1318 |
| 4 | வாகனங்கள் | 64 |

## பகுதி III – நிதிசார் செயலாற்றுகையும் பகுப்பாய்வும்

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| **உண்மையான கட்டணங்கள்** | ரூ.22,981,498 | ரூ. 32,585,000 | ரூ. 59,347,000 | ரூ.101,280,582 | ரூ .53,047,155. | ரூ. 132,085,894.53 |
| **அடிப்படையிலான கட்டணங்கள்** | ரூ.25,000,000 | ரூ.25,000,000 | ரூ.30,000,000 | ரூ.30,000,000 | ரூ.60,000,000 | ரூ. 60,000,000 |

**நிதிசார் செயலாற்றுகையை அளவிடலும் அறிக்கையிடலும்**



## பகுதி IV பதவியணியும் ஊழியர் வளமும்
## பதவியணிக் கணக்கு

| பதவி | பதவியணி | பதவியிலுள்ளோர் | வெற்றிடம் |
|---|---|---|---|
| பிரதான விலை மதிப்பாளர் | 01 | 01 | - |
| மேலதிக விலை மதிப்பாளர் | 01 | - | 01 |
| பிரதி விலை மதிப்பாளர்– வகுப்பு I தரம் II | 04 | 02 | 02 |
| பணிப்பாளர் நிருவாகம்– இ.நி.சே. வகுப்பு I/I | 01 | - | 01 |
| பிரதான கணக்காளர் I | 01 | 01 | - |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் I | 01 | 01 | 0 |
| பிராந்திய விலை மதிப்பாளர்– வகுப்பு II தரம் I | 15 | 11 | 04 |
| மாவட்ட விலை மதிப்பாளர்- வகுப்பு II தரம் II | 60 | 31 | 29 |
| சட்ட அலுவலர் | 02 | 01 | 01 |
| கணக்காளர் | 01 | - | 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | 02 | 02 | - |
| தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (வகுப்பு 2 II/I) | 02 | - | 02 |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்கம் / தமிழ்) I | 01 | - | 01 |
| உதவி மாவட்ட விலைமதிப்பாளர் (I /II/ III) | 360 | 335 | 25 |
| வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | 01 | 01 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் ( III/II, I) | 42 | 25 | 17 |
| அ.மு.உ.சே. ( III/II, I) | 103 | 92 | 11 |
| தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (வகுப்பு 3 III/II/I) | 03 | - | 03 |
| சாரதி – (வகுப்பு II A II B, I) | 18 | 16 | 02 |
| அலுவலக உதவியாளர் சேவை ( III/II, I) | 74 | 62 | 12 |
| சுற்றுலா விடுதிக் காவலர் ( III/II, I) | 02 | 02 | - |
| **மொத்தம்** | 695 | **583** | **112** |

## பகுதி V ஆதனச் சந்தை பற்றிய மீளாய்வு

### ஆதனச் சந்தை மீதான பார்வை

2016 ஆம் ஆண்டைப் பற்றி மீளாய்வு செய்யும் போது இலங்கையின் பொருளாதாரம் பலவேறுபட்ட உலகளாவிய மற்றும் தேசிய ரீதியில் பொருளாதார மற்றும் அரசியல் சவால்களுக்கு முகம் கொடுத்த நிலையில் எதிர்வரும் வருடங்களில் பொருளாதார வளர்ச்சியில் சமனிலையற்ற நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது. ஆயினும் இலங்கை வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புக்களில் முதலீடுகளுடன் தொடர்புடைய துறைகளில் உயிரோட்டமுள்ள துரித வளர்ச்சி கண்டு வரும் பிராந்தியமாக திகழ்ந்தது. இலங்கையில் ஆதனத் துறையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் முதன்மை ஆதன முதலீட்டாளர்களிடத்தில் மிகவும் பிரசித்தி பெற்றன. கொழும்பு தலைநகரம் இலங்கையில் துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் ஒரு நகராமாக மாறியுள்ளது. விசேடமாக அசையா சொத்துக்கள் தொடர்பாக உலகெங்கிலுமுள்ள முதலீட்டாளர்களின் கவனம் அதன் பால் திரும்பியுள்ளது. இலங்கையில் ஆதனச் சந்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் மத்தியிலும் அத்தோடு இந்த நாட்டில் தொழில் புரியும் வெளிநாட்டவர்களுக்கு மத்தியிலும் மிகவும் கவர்ச்சிகரமான விருத்தியை அடைந்துள்ளது.

உலக வங்கி அறிக்கைகளுக்கு அமைய இலங்கையின் பொருளாதாரம் 2010 தொடக்கம் 2015 காலப்பிரிவில் 6.4% வீத சராசரி விகிதத்தில் வளர்ச்சியடைந்தது. அது குறிப்பிட்ட ஒரு அளவில் தொடர்ந்தும் வளர்ச்சியடையும். 2016 ஆம் ஆண்டு இலங்கையில் சேவை துறை முக்கியத்துவம் பெறுகின்றது. அடுத்ததாக உற்பத்தி மற்றும் விவசாயத் துறையும் முக்கியத்துவம் பெறுகின்றன. அண்மைய காலங்களில் வசதிமிக்க சொத்துக்களுக்கு கூடிய கிராக்கி நிலவியது. அதன் காரணமாக இலங்கையில் ஆதனச் சந்தை படிப்படியாக வளர்ச்சியடைந்தது. நிறைவடைந்த மற்றும் நிறைவடைந்த வண்ணம் உள்ள சொகுசு கட்டிடங்களின் நிர்மாணிப்பு கொழும்பு நகரத்தின் உருவப் படத்தை மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்கும் நோக்கில் அதற்கு ஏற்ற வரவுசெலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன் மூலம் காணி குத்தகை வரி நீக்கப்பட்டமை முக்கிய ஒரு விடயமாகும். இந்த முன்மொழிவின் மூலம் இலங்கையின் ஆதன வியாபாரத் துறையில் முதலீடு செய்வது முதலீட்டாளர்களுக்கு மிகவும் பயன்மிக்கதாக அமைந்தது. அதன் பெறுபேறாக சிறிய நகரங்களை அண்டிய ஆதனங்களின் கிராக்கி அதிகரிக்கும். கொழும்பு மாநகரத்தில் மாத்திரம் ஆதனங்களை கொள்வனவு செய்யாது கண்டி நகரை அண்டிய பிரதேசங்களிலும் ஆதனங்களைச் தேடிச் செல்லும் போக்கொன்று காணப்படுகின்றது. மேலும் குறைந்த பிரசித்தி பெற்ற சிறு நகரங்கள் மற்றும் பெரு நகரங்களுக்கு அண்மையில் ஆதனங்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக கவனத்திற்கொள்ளும் போது இலங்கை மத்திய தர குடும்பங்களை உருவாக்கும் நோக்கிலான போக்கு ஆதனங்களின் விலைகளில் பயனுள்ள பல்வகைத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் போக்கு இலங்கையின் காணி மற்றும் ஆதனச் சந்தை பற்றிய விடயத்தில் நல்லதொரு அறிகுரியாக கருத முடியும்.

**பீ.டி.டி.எஸ்.முதுகுமாரண**
**அரசாங்க பிரதான விலை மதிப்பாளர்**
**விலை மதிப்புத் திணைக்களம்**